# தமிழருக்கு பிரத்தியேக ஆட்சி; சிங்களவர் ஆதரவு

(கொழும்பு)

நாட்டின் சிறுபான்மையின ருக்கு உரிமை வழங்கி அவர் களுக்கு பிரத்தியேக முறையி லான ஆட்சிமுறை ஒன்றை வழங்க பெருமளவு சிங்கள மக்கள் விருப்பம் தெரிவித்

(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 | திருவள்ளுவர் ஆண்டு 2023 | தை 12 | இதழ் 347
யாழ்ப்பாணம் | ஞாயிற்றுக்கிழமை | 26—01—1992

## அரசியல் வாதிகள் நம்பத் தகுந்தவர்களல்ல

(கொழும்பு)

அரசியல் வாதிகள் எவரும் நம்பத்தகுந்தவர்கள் அல்லர் என கருத்துக் கணிப்பெடுப் பொன்றில் தெரிவிக்கப்பட் டுள்ளது.

'ராவய' நடாத்திய நம்பத்

[4-ம் பக்கம் பார்க்க]

## அரசுக்கு எதிராக பெப். 6ல் பாதயாத்திரை

(கொழும்பு)

அரசின் மனித உரிமை மீறல் களையும், தனியார் மயப்படுத் தலையும் கண்டித்து எதிர்க் கட்சிகள் ஒன்றிணைந்து பெப் ரவரி 6-ஆம் திகதி கதிர்காமம் நோக்கி பெரும் பாதயாத் திரை ஒன்றை நடாத்தவுள்

[4-ம் பக்கம் பார்க்க]

# ★ நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தும் ஒரு தலைப்பட்சமான தீர்வை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை

## ஜனாதிபதி அறிவிப்பு

(புத்தளம்)

**நாட்டில் குழப்பத்தை விளைவிக்கக்கூடிய ஒருதலைப்பட்சமான தீர்வு எதனையும் தாம் ஏற்றுக்கொள்ளப்போவதில்லையென ஜனாதிபதி பிரேமதாஸா நேற்று புத்தளத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தெரிவித்தார்.**

இனப்பிரச்சினையை தீர்த்து வைப்பதற்கு சகல கட்சிகளின் உதவியையும் அரசுக்கு தேவைப்படுகிறது. பிரச்சினைக்கு தீர்வு காணும் எந்த வி யோசனையும் ஏற்றுக் கொள்ளுவதற்கு நாம் விரும்பு வதாகவும், ஆனால் நாட்டில் குழப்பத்தை விளைவிக்கக் கூடிய ஒருதலைப்பட்சமான தீர்வு எதனையும் தாம் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை என் றும் தெரிவித்தார். (மா)

## இராணுவம் சூடு 10 தமிழர் பலி

(மட்டுநகர்)

மட்டுநகர் பகுதிகளில் இரா ணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியதில் கடந்த ஒரு வாரத்தில் பத்துக்கும் மேற் பட்ட தமிழ் மக்கள் இறந்துள் ளதுடன், .0 பேர்வரை படு காயமடைந்துள்ளனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

## புலிகள் மூவரை சரணடைய உத்தரவு

(சென்னை)

விடுதலைப்புலிகள் உறுப்பி னர்கள் மூவரை சரணடையு மாறு தமிழக சிறப்பு நீதி மன்ற நீதிபதி ஜசூப் எஸ். எம். சித்திக் உத்தரவு பிறப் பித்துள்ளார்.

சென்னை பட்டினம் பாக் கான் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூடு சம்பவத்துடன் சம்பந்தப்பட்டதாகக் கூறப் படும் புலிகளைச் சேர்ந்த அகிலன், சபூர் (தம்பிக் குட்டி சிவராசா) பழனி (வெற்றிதாசன்) தமிழகத்தைச் சேர்ந்த ஜார்ஜ் நாகேஸ்வரா

(4-ம் பக்கம் பார்க்க)

## வீதிவிபத்து தடுப்பு நாளைமுதல் அமுல்

(யாழ்ப்பாணம்)

பெருகிவரும் வீதி விபத்துக் களை கருத்திற்கொண்டு 'தமி ழீழ காவல்துறையினர்' நாளை திங்கட்கிழமை முதல் நாளின்

(4-ம் பக்கம் பார்க்க)

## அரசின் செயலுக்கு பலத்த கண்டனம்

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து திருமலைக் குக் கொண்டுவந்த தமிழ் அகதி களை இராணுவத்தின் கட்டுப் பாட்டிலுள்ள பகுதிகளில் கட் டாயப்படுத்தி குடியமர்த்தப் படுவது பெரும் ஆபத்தான செயல் என்று தமிழ அரசியல் தலைவர் ஒருவர் அரசை குற் றம் சாட்டியுள்ளார்.

(4-ம் பக்கம் பார்க்க)

## சீனன்குடா விமான தளம் தடைசெய்யப்பட்ட பிரதேசம்

(திருமலை)

சீனன்குடா விமானப் படை தளப்பகுதி தற்போது தடைசெய்யப்பட்ட பிரதேச மாக அரசு அறிவித்துள்ளது.

மேற்படி பகுதிக்குள்ளும் அதனைச் சுற்றியுள்ள பகுதிக ளிலும் பொதுமக்கள் நடமா டக்கூடாதென்றும், குறிப்பாக இரவில் இப்பகுதிகளில் நட மாடுபவர்கள் உடனடியாக சுடப்படுவார்கள் என்று பாது காப்பு அமைச்சு அறிவித்துள் ளது. (வி)

## நாளை தபால் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

குருநாகலிலிருந்து தபால கத்திற்கு எடுத்துவரப்பட்ட 408 தபால் பொதிகள் தரம் பிரிக்கப்பட்டு நாளையிலிருந்து யாழ் குடாப் பகுதியில் விநி யோகிக்கப்படுமென தபால கட்டாரமொருவரிலிருந்து தெரிய வருகிறது. (56)

## சமாதான முயற்சிக்கு ஆப்பு: மேற்குலக தூதர்கள் கண்டனம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு பிரச்சினைக்கு சமாதான தீர்வொன்றைக் காண அமைச்சர் தொண்டமான் முன்வைத்துள்ள தீர்வுத் திட்டத்தை குழப்பி இனவாத பிரச்சாரம் செய்வோரை கொழும்பிலுள்ள மேற்கு நாட்டு தூதர்கள் கண்டித்துள் ளனர்.

இனப்பிரச்சினை தீர்வுக்கு எந்தவித யோசனைகளையும் முன்வைக்காமலும், மனித

(4-ம் பக்கம் பார்க்க)

## 5000 கிலோ வெடிமருந்து முற்றாக நாசம்

(கொழும்பு)

சீனன்குடா விமானப் படைத் தளத்தில் நடை பெற்ற குண்டுவெடிப்பு நேரத் தில் அங்கு இருந்த மூன்று ஆயுதக் களஞ்சியங்களும் முற் றாக நாசமடைந்துவிட்டதாக தற்போது செய்திகள் தெரி விக்கின்றன.

(4-ம் பக்கம் பார்க்க)

## 5000 படையினர் மலையகத்தில் குவிப்பு

(கொழும்பு)

மலையகப் பகுதியில் 5000க்கு மேற்பட்ட பாதுகாப்பு படை யினர் குவிக்கப்பட்டுள்ளதாக அங்கிருந்துவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நுவரெலியா, பதுளை, பண் டாரவளை, அப்புத்தளை பகுதி களிலே பெருமளவில் படை யினர் குவிக்கப்பட்டுள்ளார் கள். வீதிக்கு வீதி தடைகள் போடப்பட்டு சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின் றன. (வி)

## தீர்வு திட்டத்தை முன்வைக்க பிரதான கட்சிகள் தயக்கம்

(கொழும்பு)

இனப்பிரச்சினைத் தீர்வு குறித்த தமது கட்சிகளின் யோசனைகளை முன்வைக்க ஐக்கியதேசியக் கட்சியும், சுதந்திரக்கட்சியும் பெரும் தயக்கம் காட்டிவருவதாக கொழும்புச் செய்திகள் தெரி விக்கின்றன.

முதலில் எந்தக்கட்சி யோச னையை முன்வைக்கிறது அதில் என்னென்ன பலவீனங்கள் உள்ளன என்பது குறித்தே மேற்படி இரு கட்சிகளும் இருக்கின்றனவே தவிரத் தம் கள் யோசனையை முன்வைக்க இவை முன்வரவில்லை.

அடுத்த 3 மாதத்துள் நாடாளுமன்றத் தெரிவுக் குழுத் தீர்வுக்கான சிபாரி

(4-ம் பக்கம் பார்க்க)

